A/HRC/32/CRP.4

பிந்திய வரைவு

Distr.: Restricted
28 June 2016

# மனித உரிமைகள் பேரவை

**முப்பத்து இரண்டாவது அமர்வு**

நிகழ்ச்சி நிரல் விடயம் 2

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் ஆண்டறிக்கை, ஆணையாளர் அலுவலகம் மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் என்பவற்றின் அறிக்கைகள்**

## இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தல்

1. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 இன் பிரகாரம் இந்த வாய்மூலமான அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானம் இலங்கையின் இணை அனுசரணையுடன் இணைந்த விதத்தில் கருத்தொற்றுமையுடன் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகள் பேரவை அதன் 30வது அமர்வில் இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்பட்ட விரிவான புலன்விசாரணையின் முடிவுகள் மற்றும் காண்புகள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை தொடர்பான ஆணையாளரின் அறிக்கையை பாராட்டுதலுடன் கவனத்திலெடுத்திருந்ததுடன், அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அமுல் செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவித்தது. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன்விசாரணை அறிக்கையின் சிங்கள மற்றும் தமிழ் வடிவங்கள் இப்பொழுது http://www.ohchr.org/Countries/AsiaRegion/Pages/LKIndex.aspx இணையதளத்தில் கிடைக்கின்றன. அதன் பரிந்துரைகளின் அமுலாக்கத்தில் இடம்பெற்று வரும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யுமாறும், நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பான சம்பந்தப்பட்ட ஏனைய செயன்முறைகளை மதிப்பீடு செய்யுமாறும் மனித உரிமைகள் பேரவை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது. பேரவையின் 32வது அமர்வின் போது இந்த வாய்மூலமான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அது கேட்டுக் கொண்டிருந்தது.

2. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் மீது கட்டியெழுப்பும் விதத்தில் தீர்மானம் 30/1 இலங்கையில் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும், அதேபோல மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை பலப்படுத்துவதற்கும் அவசியமான நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத வழிமுறைகளின் அனைத்துமடங்கிய பொதி ஒன்றை முன்வைக்கின்றது. இத்தீர்மானம் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு மட்டுமன்றி, மிக முக்கியமாக இலங்கை மக்களுக்கு வழங்கியிருக்கும் வரலாற்று ரீதியான ஒரு கடப்பாட்டினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அதாவது, இறந்த கால நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கான அதன் திடசங்கற்பத்தையும், தண்டனைக்கு அச்சமின்றி குற்றங்கள் இழைக்கப்பட்டு வந்த அழிவுகரமான தசாப்தங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும், நல்லிணக்கத்தை சாதித்துக் கொள்வதற்கும், எதிர்காலத்தில் அத்தகைய மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனை தடுக்கும் பொருட்டு அனைத்துச் சமூகங்களை உள்ளடக்கிக் கொள்ளும் நிறுவனங்களையும் கட்டியெழுப்பிக் கொள்வதற்குமான அதன் கடப்பாட்டினை அது வெளிப்படுத்தியிருந்தது. ஜனாதிபதி சிறிசேன 2016 பெப்ரவரி 4 ஆந் திகதி தனது சுதந்திர தின உரையின் போது இந்த விடயத்தை ஆணித்தரமாக முன்வைத்திருந்தார்: “இந்தத் தீர்மானங்களை அமுல் செய்வதன் மூலம் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் என்பன எடுத்து வரப்படும்.”[1]

3. தீர்மானம் 30/1 நிறைவேற்றப்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்த நிலையிலும்,தேசிய ஐக்கிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பதினெட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இக்கடப்பாடுகளை அமுல் செய்வதில் இலங்கை ஈட்டிக்கொண்டிருக்கும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான தருணம் இப்பெழுது வந்திருக்கின்றது. சவால்கள் மற்றும் இடையூறுகள் என்பவற்றை இனங்கண்டுகொள்வதற்கும், மனித உரிமைகள் பேரவை இச்செயன்முறைக்கு எவ்வாறு தொடர்ச்சியாக ஆதரவளிக்க முடியும் என்ற விடயத்தையும் உள்ளடக்கிய விதத்தில் முன்னோக்கிய பயணத்திற்குத் தேவையான உத்திகளை பரிந்துரை செய்வதற்கும் இந்த மதிப்பீடு தேவையாக இருந்து வருகின்றது.

4. இந்த வாய் மூலமான அறிக்கை பெருமளவுக்கு 2016 பெப்ரவரி 6-10 காலப் பகுதியில் ஆணையாளர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.[2] தனது விஜயம் நெடுகிலும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியமைக்காக ஆணையாளர் மீண்டும் ஒருமுறை அரசாங்கத்திற்கு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார். ஜனாதிபதி சிறிசேன, பிரதம மந்திரி விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வெளி விவகார அமைச்சர் சமரவீர மற்றும் ஏனைய அமைச்சர்கள், அதேபோல பாதுகாப்புப் படைத் தளபதிகள் ஆகியோரை சந்திக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு இந்த விஜயத்தின் போது கிடைத்தது. ஆணையாளர் யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்ததுடன், அந்த இடங்களில் அவர் மாகாண முதலமைச்சர்கள், அதிகாரிகள், சமயத் தலைவர்கள் ஆகியோரையும், பாதிக்கப்பட்ட சமூகங்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரையும் உள்ளடக்கிய பரந்த வீச்சிலான மக்கள் தரப்பிரைச் சந்தித்தார்.

5. மேலும், அண்மைக் காலத்தில் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்த விசேட நடைமுறைகள் பணிப்பாணைதாரர்கள் ஒரு சிலரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பனவும் இந்த வாய்மூலமான அறிக்கைக்குப் பயனுள்ளதாக இருந்து வந்தன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் இலங்கை அரசாங்கம் மிகவும் சாதகமான விதத்திலும், ஆக்கபூர்வமான விதத்திலும், மேற்கொண்டு வரும் தொடர்புகளை ஆணையாளர் வரவேற்கின்றார். அனைத்து விசேட நடைமுறைகள் பணிப்பாணைதாரர்களுக்கும் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கையினால் விடுக்கப்பட்ட பகிரங்க அழைப்பையும் அவர் வரவேற்கின்றார். பலவந்தமாக மற்றும் சுயவிருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் தொடர்பான செயற்குழு 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கைக்கான ஒரு

---

1.http://www.president.gov.lk/news/speech-delivered-by-president-maithripala-sirisena-at-the-68th-independence-day-celebrations-on-february-4-2016/

2http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=17025&LangID=E

முழுமையான விஜயத்தை மேற்கொண்டது[3]. உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பன குறித்த விசேட அறிக்கையாளர் இலங்கைக்கான தனது 2 ஆவது மற்றும் 3 ஆவது தொழில்நுட்ப விஜயங்களை 2016 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் யூன் ஆகிய மாதங்களில் முறையே மேற்கொண்டிருந்த நிலையில், இலங்கை அதிகாரிகளுடனும் சிவில் சமூகத்துடனும் அவர் தொடர்ச்சியான விதத்தில் தொடர்புகளைப் பாரமரித்து வருகின்றார். சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற செயல்கள், இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை என்பன தொடர்பான விசேட அறிக்கையாளர் மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோரின் சுயாதீனம் தொடர்பான விசேட அறிக்கையாளர் ஆகியோர் இலங்கை தொடர்பான ஒரு கூட்டு விஜயத்தை 2016 ஏப்ரல் - மே காலப்பிரிவில் பூர்த்தி செய்தார்கள்[5]. சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் 2016 அக்டோபர் மாதத்தில் தனது இலங்கை விஜயத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதுடன், அபிப்பிராயம் மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையாளருக்கு 2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கச் செய்யப்படுவதிலிருந்து அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் சர்வதேச சமவாயத்தை இலங்கை 2016 மே 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தியுள்ள விடயத்தையும் ஆணையாளர் வரவேற்கின்றார். அடுத்து வரும் மாதங்களின்போது பல மனித உரிமைகள் ஒப்பந்த அமைப்புக்கள் இலங்கை அதன் ஒப்பந்தக் கடப்பாடுகளை அமுல் செய்யும் விடயத்தில் எட்டியிருக்கும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவுள்ளன[6]. மேலும், 2016 அக்டோபர் நவம்பர் காலப்பிரிவில் இடம்பெறும் அகிலம் தழுவிய பருவகால மீளாய்வு செயற்குழுவின் 28 ஆவது அமர்வின் போதும் இலங்கை தொடர்பான ஒரு மீளாய்வு மேற்கொள்ளப்படும். அரசாங்கம் 2016 யூன் 21 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு தகவல்களை வழங்கியிருந்ததுடன், இந்த வாய்மூல அறிக்கையை தயாரிப்பதில் அந்த விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளன.

6. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) இலங்கையில் அமைந்திருக்கும் அதன் அலுவலகத்துக்கூடாகவும், அதன் தலைமையகத்தில் நிபுணர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் ஆகியோரை பணியில் அமர்த்துவதன் மூலமும் ஒரு சில துறைகளில் இலங்கை அரசாங்கத்துக்கு தொழில்நுட்ப உதவியை வழங்கி வந்துள்ளது. இது தேசிய கலந்தாராய்வுகள் செயன்முறையை வடிவமைத்தல் மற்றும் அதற்கு செயல்வடிவம் கொடுத்தல், நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளுக்கான எண்ணக்கருக்கள் குறித்த ஆலோசனை என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. மேலும், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும், சிவில் சமூகத்துடனும் மிக நெருக்கமான விதத்தில் செயற்பட்டு வருவதுடன், ஐக்கியநாடுகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதியத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதில் வதிவிட ஒருங்கிணைப்பாளருடனும், இலங்கைக்கான ஐக்கியநாடுகள் அணியுடனும் முழுமையாக இணைந்து செயற்பட்டு வருகின்றது.

3 http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=16771&LangID=E

7. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றையும் உள்ளடக்கிய அரசியல் கட்சிகளின் பரந்த ஒரு அணியுடன் இணைந்த விதத்தில் 2015 செப்டெம்பர் மாதத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கிய அரசாங்கம் அதன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பதுடன், சீர்திருத்தங்களுக்கு உசிதமான அரசியல் சூழ்நிலை ஒன்றையும் உருவாக்கி வருகின்றது. ஆனால், ஆளுகை தொடர்பான சீர்திருத்தம், நிலைமாற்றக்கால நீதி மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த வாக்குறுதிகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. தடுத்து நிறுத்தப்படக்கூடிய அல்லது பலவீனமடையக்கூடிய ஆபத்துக்களையும் அவை எதிர்கொள்ள முடியும். கூட்டரசாங்கமொன்றுக்குள் அரசியல் கட்சிகளுக்கிடையிலான பேரம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன சிக்கலான ஒரு விடயமாக இருந்து வந்துள்ளது. அரசியல் அமைப்பைச் திருத்துவதற்கு தேவையான மூன்றிலிரண்டு பாராளுமன்ற பெரும்பான்மையைக் கட்டியெழுப்பி, தக்க வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயன்று வரும் நிலையிலேயே இச்சிக்கல் தோன்றியுள்ளது. இதன் விளைவாக அமைச்சுக்களுக்கான பணிப்பாணைகள் பல அமைச்சுக்களில் உள்ளடக்கப்படும் விதத்தில் விரிவான ஒரு அமைச்சரவை உருவாக்கப்பட்டிருப்பதுடன், பொறுப்புக்கூறல் போன்ற நிர்ணயகரமான பிரச்சினைகள் தொடர்பாக கலப்புச் செய்திகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

8. அரசியலமைப்பு சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒரு தருணம் இப்பொழுது வாய்த்துள்ளது. 2016ஆம் ஆண்டு முடிவுக்குள் ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்து, அதற்கு ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்கென அல்லது அரசியலமைப்பைச் சீர்திருத்துவதற்கென அரசியலமைப்பு சபை ஒன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்கான ஒரு தீர்மானம் பாராளுமன்றத்தில் 2016 மார்ச் 10ஆந் திகதி நிறைவேற்றப்பட்டது. அந்த அரசியலமைப்பு பின்னர் 2017 ஆம் ஆண்டில் ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். அரசியலமைப்பை வரையும் செயன்முறை பொதுமக்களின் மகஜர்களைப் பெற்றுக்கொள்ளும் கமிட்டியின் மேற்பார்வையுடன் பொதுமக்களுடன் கலந்தாராய்வுகளை நடத்தும் அனைவரையும் உள்ளடக்கிய செயன்முறையிலிருந்து பயனடைந்துள்ளது. இக்கமிட்டி மகஜர்களைப் பெற்றுக் கொண்டிருப்பதுடன், 2016 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது மாவட்ட மட்ட கலந்தாராய்வுகளை நடத்தியுள்ளது.

9. மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, அரசியலமைப்பு சீர்திருத்தச் செயன்முறை கடந்த காலத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் வழிகோலியிருந்த கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கும், அத்தகைய சம்பவங்கள் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்துவதற்குமான மிக முக்கியமான ஒரு வாய்ப்பினை வழங்கியிருப்பதனை அவதானிக்க முடிகிறது. இவை அனைத்துமடங்கிய உரிமைகள் குறித்த ஒரு சாசனம், மிகவும் வலுவான நிறுவனரீதியான பரீட்சிப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள், அதிகரித்தளவிலான அரசியலமைப்பு ரீதியான ஒரு மீளாய்வு, நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பான உயரளவிலான உத்தரவாதங்கள், வினைத்திறன் மிக்க தனிநபர் முறைப்பாட்டுப் பொறிமுறைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தத்தைப் பெருமளவுக்கு நேரடியாக வலுவுக்கிடல் என்பவற்றையும் உள்ளடக்க முடியும், மேலும், இராணுவம் தொடர்பான ஏனைய நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டியிருப்பது போல, பாதுகாப்புக் கொள்கை, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவியுயர்வு, செலவுத்தொகைகளை

ஒதுக்குதல் மற்றும் கொள்வனவு என்பன தொடர்பாக பன்முகக் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறும் பொறிமுறைகளின் வடிவில் இராணுவம் தொடர்பான சிவில் சமூகத்தின் மேற்பார்வை பலப்படுத்தப்பட வேண்டிய தேவையையும் குறிப்பிட வேண்டும். அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைளை ஸ்தாபிப்பதற்கு வசதி செய்து கொடுக்கும் விடயத்திலும் புதிய அரசியலமைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. உதாரணமாக, தேசிய சட்டங்களில் சர்வதேச குற்றச் செயல்களை ஒரு குற்றச் செயலாக்குதல் அல்லது சர்வதேச நீதித்துறை ஆளணியினரின் பங்கேற்புக்கு இடமளித்தல் என்பவற்றை இங்கு குறிப்பிட முடியும். அதே வேளையில், அரசியலமைப்பு தொடர்பான மாற்றங்களை முன்னெடுக்கும் அரசியல் செயன்முறை பொறுப்புக்கூறுதல், நிலைமாற்றக்கால நீதி மற்றும் மனித உரிமைகள் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் எவ்வித சமரசங்களுக்கோ அல்லது விட்டுக்கொடுப்புக்களுகோ இடமளிக்கமாட்டாது என்றும் ஆணையாளர் நம்புகின்றார்.

10. அரசாங்கம் முன்னெடுத்து வரும் அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயன்முறையின் முதலாவது கட்டத்தின் போது பெறப்பட்டிருக்கும் ஒரு அனுகூலம் 2015 ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தமாகும். இது நீதித்துறையின் சிரேஷ்ட பதவிகளுக்கும் நிறுவனங்களுக்கும் நியமனங்களைப் பரிந்துரை செய்வதற்கென அரசியலமைப்புப் பேரவையை மீண்டும் எடுத்து வந்துள்ளது. இது மறுபுறத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நன்மதிப்புமிக்க உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு வழி கோலியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு வளங்கள், ஆளணி என்பவற்றின் அடிப்படையில் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், புதிதாக அதற்கு கிடைத்திருக்கும் சுயாதீனம் ஏற்கனவே பெறுபேறுகளைக் காட்டி வருகின்றது. ஆணைக்குழு வெளியிட்ட பகிரங்க அறிக்கைகள் மற்றும் சட்டவரைபுகளில் அது மேற்கொண்ட தலையீடுகள் என்பன இச்சுயாதீனத்தை எடுத்துக் காட்டுகின்றன. மரண தண்டனை, பொலீஸ் துஷ்பிரயோகம், தடுத்து வைத்தல் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளில் அது மேற்கொண்ட தலையீடுகளையும் இங்கு குறிப்பிட முடியும். அரசாங்கத்தின் ஏனைய அமைப்புக்கள் இந்த மிக முக்கியமான ஆணைக்குழுவுடன் பெருமளவுக்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டு, அதற்கு மரியாதை அளிக்குமென்றும், நிலைமாற்றக்கால நீதி மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பவற்றுக்கான செயன்முறையின் போது அனைத்து அம்சங்களிலும் இந்த ஆணைக்குழுவின் பங்கேற்பு முழுமையாக பெற்றுக் கொள்ளப்படும் என்றும் ஆணையாளர் நம்புகின்றார்.

---

4 http://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=17029&LangIE

5 http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=19943&LangID=E, http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=19942&LangIE

6 In 2016, Sri Lanka will be reviewed by CERD (combined 10th – 17th periodic reports) in August, CMW (2nd periodic report) in September, and CAT (5th periodic report) in November. In 2017, Sri Lanka will be reviewed by CEDAW (8th periodic report) in February.

11. நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விடயத்திலும், பேரினவாத அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதிலும் அரசாங்கம் ஒரு சில முக்கியமான குறியீட்டுப் படிமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருந்த ஒரு சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகிய தரப்புக்களை அரசாங்கம் 2015 நவம்பர் மாதத்தில் அப்பட்டியலிலிருந்து நீக்கியது. 2016 பெப்ரவரி சுதந்திர தின நிகழ்வுகளின் போது - 1950களின் தொடக்கத்தின் பின்னர் முதல் தடவையாக - தேசிய கீதத்தை சிங்களத்திலும், தமிழிலும் இசைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வலுவான ஒரு சைகையாக இருந்து வருவதுடன், அதனையடுத்து பரஸ்பர நல்லெண்ணத்தை வெளிப்படுத்திக் காட்டும் விதத்தில் வட மாகாண முதலமைச்சர் யாழ்ப்பாணத்திலிருக்கும் பௌத்த கோயிலுக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். 2016 மே 19 ஆம் திகதி கொண்டாடப்பட்ட 2009 ஆம் ஆண்டு இராணுவ வெற்றியை நினைவு கூரும் நிகழ்வு, இராணுவ வல்லமையை பறைசாற்றும் முன்னைய வருடங்களின் கொண்டாட்டங்களைப் போலன்றி நினைவு கூரல் தினமொன்றாக கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிரதம மந்திரி விக்கிரமசிங்க ஆகியோர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும், இடம்பெயர்ந்து வாழும் சமூகத்தினரையும் சந்தித்திருப்பதுடன், ஒருமுறை தன்னைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டிய எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தைச் சேர்ந்த சிறைக் கைதி ஒருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

12. இந்த வகையைச் சேர்ந்த துணிகரமான, வெளிப்படையான படிமுறைகள் நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றுடன் கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதில் ஒரு முக்கியமான தாக்கத்தை எடுத்து வருமென ஆணையாளர் உறுதியாக நம்புகின்றார். ஆனால், பெருமளவுக்கு நிறுவனமயப்பட்ட மாற்றங்கள் அதனையடுத்து எடுத்துவரப்பட வேண்டும் என்பது தெளிவாகும். அதே வேளையில், சமூக வலைத்தளங்களிலும் ஏனைய வடிவங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் (“Sinhale” ஸ்ரிக்கர் பிரச்சாரம் போன்ற) தீவிரப் பிரச்சாரங்கள் குறித்து அவர் கரிசனை கொண்டுள்ளார். இனத்துவ, சமயச் சிறுபான்மையினர் மற்றும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள் என்பவற்றுக்கும் எதிராக ஒரு தீவிர தேசியவாதம் இவ்விதம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முஸ்லிம் சமூகம், சுவிஷேச கிறிஸ்தவ சமூகம் ஆகியோரையும், பெண் ஓரினப் புணர்ச்சியாளர், ஆண் ஓரினப் புணர்ச்சியாளர், இருபால் ஈர்ப்பாளர் மற்றும் பால்நிலை நிலைமாற்றப் பிரிவினர் (LGBT) ஆகிய குழுவினரையும் இலக்காகக் கொண்டு அண்மைய மாதங்களில் தொடர்ச்சியாக சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. வெறுப்பைத் தூண்டும் பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டுதல் என்பவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டவாக்கத்தை எடுத்து வருவதனை உள்ளடக்கிய விதத்தில் அத்தகைய பாரபட்ச இயல்பிலான வன்முறைச் சம்பவங்களை எதிர்த்துப் போராடும் விடயத்தில் உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணையாளர் அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றார்.

13. பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிறுபான்மைச் சமூகத்தினர் ஆகியோருக்கு மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடிய ஏனைய திடமான வழிமுறைகளை எடுத்து வரும் விடயத்திலும் அரசாங்கம் போதிய வேகத்துடன் செயற்பட்டிருக்கவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் இன்னமும் இராணுவத்தின் வசம் இருந்து வரும் பொதுமக்களின் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றை விடுவிக்கும் விடயத்தில் அரசாங்கம் 2015 ஆம் ஆண்டில் ஆரம்ப முன்னேற்றமொன்றை எட்டியிருந்தது. அதன் பிரகாரம் 3136 ஏக்கர் காணிகள் 2200 குடும்பங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. 2016 இல் ஆயுதப்படைகள்

குறிப்பாக, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் மேலும் 2652 ஏக்கர் காணிகளை விடுவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் விஜயத்தின் போது, காணிகளை விடுவிக்கும் விடயத்திலும் இராணுவத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் கட்டமைப்புக்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் விடயத்திலும் ஒரு சில சிக்கல்கள் நிலவி வரும் விடயம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், புதிய செயலணி இச்செயன்முறையை யூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றது என அவரிடம் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து இந்த விடயத்தில் சிறிது முன்னேற்றமே ஏற்பட்டிருப்பதுடன், இராணுவத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் சிவில் சமூகத் தலைவர்களும், அதிகாரிகளும் போராடிக் கொண்டிருப்பது போல் தெரிகின்றது. பண்ணைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் இராணுவம் தொடர்ந்து ஈடுபட்டு வருவது தொடர்பான அறிக்கைகள்கிடைத்து வருகின்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்திருக்கும் சமூகங்களை ஆணையாளர் சென்று பார்த்த பொழுது, அது தொடர்பான வெளிப்படைத் தன்மை குறைவாக இருந்து வரும் விடயத்தையும், மக்கள் மீண்டும் மனவிரக்தி மற்றும் ஏமாற்றம் என்பவற்றை எதிர்கொண்டு வருவதனையும் அவர் கண்டார். யாழ்ப்பாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசித்து வரும் முகாமில் இருக்கும் ஒருவர் பின்வருமாறு கூறியிருந்தார்: ''இப்பொழுது எங்களுக்கு நல்ல அரசாங்கம் இருக்கின்றது. நாங்கள் இப்பொழுது வீட்டுக்ச் செல்ல விரும்புகின்றோம்.''

14. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புத் தடுப்புக்காவல் கைதிகளின் நிலை தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான கரிசனைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. குற்றச்சாட்டு எதுவுமில்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 39 பேரை அரசாங்கம் 2015 டிசம்பர் மாதத்தில் பிணையில் விடுவித்தது. ஆனால், சுமார் 250 தடுப்புக் காவல் கைதிகள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. இச்சம்பவங்களில் 117 சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருப்பதுடன், ஜனவரி மாதத்தில் இந்த வழக்கு நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்கென அது ஒரு விசேட உயர் நீதிமன்றப் பிரிவை உருவாக்கியது. மார்ச் மாத முடிவில் சட்டமா அதிபர் திணைக்களம் இது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், இவ்வருடத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவோ; அல்லது விடுவிப்புக்கள் மேற்கொள்ளப்படவோவில்லை. சம்பந்தப்பட்ட தனிநபர்களைப் பொறுத்தவரையில் - அவர்களில் ஒரு சிலர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் - இது கடும் மன அதிர்ச்சியை எடுத்து வரும் ஒரு நிலை மட்டுமன்றி, தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் சமூகம் ஆகிய தரப்புக்களைப் பொறுத்தவரையிலும் கூட விரக்தியை அதிகரிக்கச் செய்யும் ஒரு காரணியாக இருந்து வருகின்றது. ஆணையாளர் 2016 பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட தனது விஜயத்தின் முடிவின் போது பாதுகாப்பு தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு குற்றப் பத்திரிகைகளை வழங்குவதற்கோ அல்லது அவர்களை விடுவிப்பதற்கோ விரைவான ஒரு சூத்திரத்தை கண்டறிய வேண்டுமென அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

15. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாட்டுக்கு மத்தியிலும் கூட, புதிய கைதுகளை மேற்கொள்ளும் விடயத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீதே அது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ளது. அதனால் இந்நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. அறிக்கைகளின் பிரகாரம் அரசாங்கம் 2015 – 2016 காலப்பிரிவின் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 40 க்கும் மேற்பட்ட புதிய கைதுகளை மேற்கொண்டிருந்து. யாழ்ப்பாணத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதனையடுத்து 2016 மார்ச் காலப் பிரிவின் போது மேற்கொள்ளப்பட்ட 25 க்கும் மேற்பட்ட கைதுகளையும் இது உள்ளடக்குகின்றது. இந்தக் கைதுகளில் ஒரு சில இடம்பெற்றதாகக் கூறப்படும் விதம் தன்னிச்சையானதாக இருந்து வந்திருப்பதுடன், உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாத விதத்திலும் அவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு சிலர் இதனை கடந்த காலத்தில் இடம்பெற்ற ''பிரபல்யமான வெள்ளை வான்'' கடத்தல்கள், காணாமல்போதல் சம்பவங்களுடன் ஒப்பிட்டுள்ளனர். தெளிவான வேறுபாடுகள் இருந்து வரும் அதே வேளையில் (கைது செய்யப்பட்ட அனைவரும் ஒருசில மணித்தியாலங்களில் தடுப்புக்காவல் கைதிகளாக அடையாளப்படுத்தப்பட்டனர்) அத்தகைய சம்பவங்கள் சமூகத்திற்கு மத்தியில் அச்சவுணர்வை எடுத்து வருவதுடன், சட்டத்தின் ஆட்சியை மீள எடுத்துவருவது தொடர்பான அரசாங்கத்தின் முயற்சிகள், மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் குறைவடையச் செய்கின்றன. சட்டத்தின் பிரகாரமும், சர்வதேச தரநியமங்களின் பிரகாரமும் குற்றவியல் நடைமுறைகளை மேற்கொள்வதற்கென அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் குறித்தும் இது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது. சித்திரவதை தொடர்பான விசேட அறிக்கையாளரும் அவருடைய விஜயத்தின் முடிவின் போது பாதுகாப்புக் காரணங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் சித்திரவதைக்கும், துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள் என மீண்டும் மீண்டும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தார். எனினும், இச்சம்பவங்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற விதத்தில் அடிக்கடி மற்றும் தீவிரமான விதத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பி வரும் தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சித்திரவதை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக ஒரு சில குழுக்கள் அறிக்கையிட்டுள்ளன.

16. தொடர்ச்சியாக நிலவிவரும் இந்தக் கரிசனைகள் இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவு என்பவற்றின் மீது முழுமையான சிவிலியன் கட்டுப்பாட்டை வலியுறுத்துவதிலும், கடந்த காலத்தில் பாரதுாரமான மீறல்களுக்குப் பொறுப்பாக இருந்து வந்தாகக் கூறப்படும் அலகுகள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றைக் கலைத்து விடுவதிலும் அரசாங்கம் எதிர்கொண்டு வரும் ஆழமான சவால்களைச் சுட்டிக் காட்டுகின்றன. சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமை போன்ற இராணுவமயமாக்கலைக் குறைப்பதை நோக்கிய வரவேற்கத்தக்க படிமுறைகளுக்கு மத்தியிலும் கூட,வடக்கிலும்கிழக்கிலும் இராணுவத்தின் பிரசன்னம் பாரிய அளவில் காணப்படுவதுடன், கண்காணிப்புக் கலாசாரம் ஒன்றும் அப்பிரதேசங்களில் நிலவி வருகின்றது. ஒரு சில சந்தர்ப்பங்களில் பயமுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் என்பன தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னைய தடுப்புக்காவல் கைதிகள் மற்றும்பாதிக்கப்பட்ட மக்களுடன் பணியாற்றி வரும் சிவில் சமூகக் குழுக்களாகிய தரப்புக்கள் தமது பணிகள் தொடர்பாக தொடர்ச்சியான பாதுகாப்புச் சோதனைகள் மற்றும் விசாரணைகள் என்பவற்றை எதிர்நோக்கி வருகின்றனர்

17. அதே வேளையில், பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய பாதுகாப்புச் சட்டங்களின் வரைவு வேலையை அரசாங்கம் தொடக்கி வைத்துள்ளது. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகளினால் முன்னைய சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டிருந்த பல அவதானிப்புக்களை அச்செயன்முறை கவனத்திலெடுக்குமென ஆணையாளர் நம்புவதுடன், இது தொடர்பாக தனது அலுவலகத்தின் ஆதரவையும், பங்கேற்பையும் பெற்றுக் கொடுக்க விரும்புகின்றார். மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்பான பாதுகாப்புக்கள் எனக் கருதப்படும் பணிப்புரைகளை மீள வெளியிட்டிருந்தது. ஜனாதிபதி யூன் 17 ஆம் திகதி அதே மாதிரியான பணிப்புரைகளை பாதுகாப்புப் படைகளின் தளபதிகளுக்கும், பொலீசாருக்கும் வழங்கியிருந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், கருமங்கள், கடமைகள் என்பவற்றை பிரயோகிப்பதற்கும் மேற்கொள்வதற்கும் இயலச் செய்யும் விதத்திலும் கைது செய்யப்படும் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் நோக்கத்துடனும், அத்தகைய நபர்கள் மனிதாபிமான விதத்தில் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கெனவும் அப் பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்தன. இப்பணிப்புரைகளை ஆணையாளர் வரவேற்பதுடன், சட்டவாக்கம் தொடர்பான மீளாய்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவை முழுமையாக சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டுமென அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றார் மேலும், ஆட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படிருக்கும் இடங்களில் சுயாதீனமான விதத்தில், தடங்கல்கள் எவையுமின்றிக் கண்காணிப்பை மேற்கொள்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் முழுமையாக பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் இங்கு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

18. பொறுப்புக்கூறும் நிலையை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றி வைத்தல் என்பன தொடர்பான அரசாங்கத்தின் திடசங்கற்பத்தின் மீது பொதுமக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை உடனடியாகக் கட்டியெழுப்பக்கூடிய மற்றொரு வழி நீதிமன்றங்களில் நிலுவையிலிருந்து வரும் ஒரு சில குறியீட்டு அடிப்படையிலான மனித உரிமைகள் வழக்குகள் தொடர்பாக வெற்றிகரமான விதத்தில் வழக்குத் தாக்கல் நடைமுறைகளை மேற்கொள்வதாகும். இந்த ஆணைக்குழு பணியைப் பொறுப்பேற்ற முதல் மாதங்களின்போது ஒரு சில சம்பவங்கள் தொடர்பாக திடீர் மாற்றங்களும், ஒரு சில கைதுகளும் இடம்பெற்றன. உதாரணமாக, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலி கொட காணாமல் போன சம்பவம், பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரின் படுகொலைகள் மற்றும் றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாயுதீன் கொலைச் சம்பவம் என்பவற்றை இங்கு உதாரணங்களாக காட்ட முடியும். எனினும், இவை தொடர்பான முன்னேற்றம் இதன் பின்னர் மந்தமடைந்துள்ளது. திருகோணமலையில் 5 மாணவர்கள்படுகொலை மற்றும் ACF தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் கொல்லப்பட்ட சம்பவம் என்பன தொடர்பான வழக்குகள் சுருக்க வழக்கு நடைமுறைகளின் பல்வேறு

கட்டங்களில் இருந்து வருகின்றன. சாட்சிகள் ஆஜராவதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அரசாங்கம் புதிய முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் இந்நிலைமை காணப்படுகின்றது.

19. விசுவமடுப் பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டில் இரண்டு தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் ரீதியான தாக்குதல் தொடுத்தமை தொடர்பாக அக்டோபர் மாதத்தில் 4 சிப்பாய்கள் குற்றவாளிகளாக காணப்பட்டிருந்தனர். எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றத் தீர்ப்புக்கள் மிக அரிதாகவே இருந்து வருகின்றன. ஆணையாளர் தனது இலங்கை விஜயத்தின் போது, இராணுவம் சம்பந்தப்பட்டிருக்கும் 39 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த வழக்குகள் தொடர்பாக இடம்பெற்றிருக்கும் முன்னேற்றத்தின் இற்றைப்படுத்தப்பட்ட நிலை முன்வைக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார். அரசாங்கம் 2014 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் கமிட்டியிடம் இச்சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. 2016 ஜனவரி மாதத்தில் ஹோமாகம மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் பிரகீத் எக்னலிகொட அவர்களின் மனைவியை அச்சுறுத்தி, நீதிமன்ற நடைமுறைகளைக் குழப்பியடிப்பதற்கு முயன்ற கடும்போக்குவாத பௌத்த மதத் தலைவர்களை நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்திருந்தனர். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்/கருணா குழு என அழைக்கப்பட்ட துணைப்படைக் குழுவின் தலைவர்களில் ஒருவரான பிள்ளையான் பரராஜசிங்கம் வழக்கில் கைது செய்யப்பட்டு இப்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொலைகள், கடத்தல் சம்பவங்கள் மற்றும் பரவலான விதத்தில் சிறுவர்களை சிப்பாய்களாக ஆட்சேர்ப்புச் செய்தமை என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வந்தவர்கள் எனக்கூறப்படும் ஏனைய துணைப்படைக் குழுக்களின் தலைவர்கள் தொடர்ந்து பொதுப் பதவிகளை வகித்து வருவதுடன், எத்தகைய குற்றவியல் விசாரணைகளையும் அவர்கள் எதிர்கொள்ளவில்லை. தற்போது இவ் வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தையும் புதிய நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அந்த வழக்குகள் அலட்சியப்படுத்தப்பட முடியாது என்ற விடயத்ததையும் ஆணையாளர் வலுவாகப் பரிந்துரை செய்கின்றார்.

20. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரைப் பாதுகாப்பதற்கு பயனுறுதி வாய்ந்த முறைமை ஒன்று இல்லாதிருந்து வரும் நிலை ஒரு முக்கியமான இடையூறாக உள்ளது. நீண்ட காலமாக நிலுவையிலிருந்து வந்த சட்டமொன்றை புதிய அரசாங்கம் 2015 பெப்ரவரி மாதத்தில் நிறைவேற்றியது. ஆனால், இச்சட்டம் ஆணையாளர் தனது முன்னைய அறிக்கைகளில் எடுத்துக்காட்டியிருந்த குறைபாடுகளைக் கொண்டுள்ளது. அரசாங்கம் 30/1 தீர்மானத்தில் இச்சட்டத்தை மேலும் மீளாய்வு செய்வதற்கான கடப்பாட்டினை ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால், இதுவரையில் அது இடம்பெறவில்லை. அதே வேளையில், இச்சட்டத்தின் கீழ் 2016 ஜனவரி தொடக்கம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரைப் பாதுகாப்பதற்கான அதிகார சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் முதலாவது தலைவர் வெளியேறியமை மற்றும் அவருக்குப் பதிலாக அந்த இடத்திற்கு வந்தவர் மற்றொரு வெளிநாட்டுப் பதவிக்கு அனுப்பி வைக்கப்பட்டமை என்பவற்றின் காரணமாக அந்த அதிகார சபை பாதிப்படைந்துள்ளது. சர்வதேச குற்றச் செயல்களுக்கு பொருந்தக்கூடியதும், மக்களுடைய நம்பிக்கையைக் கொண்டிருப்பதுமான வினைத்திறன்மிக்க சாட்சிகள்

பாதுகாப்பு முறை ஒன்றைப் பலப்படுத்துவது நம்பிக்கையுடன் சாட்சிகள் சாட்சியமளிப்பதற்கு முன்வருவதற்கும், நிலைமாற்றக் கால நீதிப் பொறிமுறைகள் நம்பகத்தன்மை வாய்ந்தவை எனக் கருதப்படுவதற்கும் அத்தியாவசியமானதாகும்.

21. சர்வதேச தரநியமங்களுடன் இணைந்த விதத்தில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்கும் நிகழ்சித்திட்டத்தின் சுயாதீனம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை சிறந்த விதத்தில் ஒருங்கிணைத்துக் கொள்ளும் பொருட்டு, குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு உதவி, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் 2015 ஆம் ஆண்டின் சட்டத்தை மீளாய்வு செய்து, திருத்த வேண்டும் என ஆணையாளர் வலுவான விதத்தில் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றார்.

22. அனைத்துமடங்கிய நிலைமாற்றக் கால நீதி நிகழ்ச்சிநிரல் ஒன்றை அமுல் செய்வதற்கான தனது கடப்பாட்டை தீர்மானம் 30/1 இல் அரசாங்கம் எடுத்துக் காட்டியிருந்தது. அது நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத பல்வேறு வழிமுறைகளை உள்ளடக்குவதுடன், வழக்குத் தொடுக்கும் முன்முயற்சிகள், உண்மையைக் கண்டறிதல், இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் என்பவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும். அரசாங்கம் இது தொடர்பாக பல்வேறு விதமான ஆயத்தச் செயன்முறைகளில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், பல்வேறு நிலைமாற்றக்கால நீதிக் கூறுகளை வடிவமைத்து, ஸ்தாபிப்பதற்கு இடமளிக்கக்கூடிய கட்டமைப்புக்களின் உருவாக்கத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் பின்தங்கியதாகவும், மந்தமானதாகவும் இருந்து வந்துள்ளது.

23. ஒரே காரியத்தைச் செய்யும் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுக்கு மத்தியில் பொறுப்புக்கள் குறித்த தெளிவின்மையினால் இதன் முன்னேற்றம் பாதிப்படைந்துள்ளது. மேலும், ஒட்டுமொத்த அனைத்துமடங்கிய நிலைமாற்றக் கால நீதி உத்தியொன்று இல்லாதிருக்கும் நிலையில், பல்வேறு நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இணைய முடியும் என்பது தொடர்பான கேள்விகள் எழுகின்றன. இதில் சம்பந்தப்பட்டிருக்கும் பல்வேறு அமைச்சுக்களுக்கிடையில் ஒட்டுமொத்த அரசியல் ஒருங்கிணைப்பை வழங்குவதற்கென 2015 நவம்பர் மாதத்தில் பிரதம மந்திரியின் செயற்குழு ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு ஆதரவளிப்பதற்கென பிரத்தியேகமாக நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் ஸ்தாபிக்கப்பட்டது (SCRM). இந்தச் செயலகத்துக்கு அண்மையில் ஒரு செயலாளர் நாயகம் நியமனம் செய்யப்பட்டமை பெருமளவுக்கு வரவேற்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், அதன் நிறுவனரீதியான ஆற்றல் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன், அர்ப்பணிப்புடன் கூடிய நிபுணத்துவ அறிவும் அதற்குத் தேவைப்படுகின்றது.

24. தீர்மானம் 30/1 எடுத்துக் காட்டிய நிர்ணயகரமான ஒரு முதற்படி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாரம்பரியமாகப் புறமொதுக்கப்பட்டவர்கள் ஆகியோர் இந்தப் பொறிமுறைகள், செயன்முறைகள் என்பவற்றின் வடிவமைப்பிலும், அமுலாக்கலிலும் மையத்தில் இருந்து வருவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு பரந்த மட்டத்திலான தேசிய கலந்தாராய்வுகளை

மேற்கொள்வதாகும். முக்கியமாக போருடன் சம்பந்தப்பட்ட விதத்தில் இடம்பெற்றிருக்கும் மீறல்கள் தொடர்பாக பெண்கள் போதிய நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும், இச்செயன்முறைகளில் அவர்கள் முழுமையாகப் பங்கேற்பதனை இயலச் செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான விசேட வழிமுறைகளுக்கான ஏற்பாடுகளை நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகள் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், இக்கலந்தாராய்வுகளை அடுத்து, கலந்தாராய்வுகளில் உள்ளடக்கப்படும் மக்கள் தகவல்களை அறிந்த நிலையில் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வகை செய்யும் விதத்தில் தேவையான தகவல்கள் மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட உணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பாக நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோருக்கான தெளிவான நிறுவன ரீதியான பாதுகாப்புக்கள் என்பன நிர்ணயகரமானவையாக இருந்து வருகின்றன.

25. அரசாங்கம் 2016 ஜனவரி மாதத்தில் சிவில் சமூகத்தின் முக்கியமான உறுப்பினர்களைக் கொண்டு 11 உறுப்பினர் செயலணியொன்றை நியமனம் செய்தது. தேசிய கலந்தாலோசனைச் செயன்முறையை நடத்துவதற்கான பணிப்பாணையை அந்த செயலணி பெற்றுக் கொண்டிருந்தது. எழுத்து மூலமான மகஜர்களைப் பெற்றுக் கொள்வதற்கென செயலணி ஒரு பொறிமுறையை உருவாக்கியதுடன் இணைந்த விதத்தில் பெப்ரவரி மாதத்தில் இணைய வசதிக்கூடான கலந்தாலோசனைகள் துவக்கி வைக்கப்பட்டன. கவனயீர்ப்புக்குக்குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுடனான நேரடிக் கலந்தாலோசனைகள் எனபன யூன் மாதத்தில் துவக்கி வைக்கப்பட்டிருந்துடன், அவை மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு தரப்புக்களுடனும் கலந்தாலோசனை செய்யும் செயன்முறை நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு புதிய கட்டத்துக்குள் பிரவேசிப்பதும், அக்கலந்தாலோசனைகளில் பங்கேற்பவர்கள் துன்புறுத்தல் அல்லது பயமுறுத்தல் என்பவற்றுக்கு ஆளாக்கப்படாமலிருப்பதும் முக்கியமாகும். வெளிநாட்டிலிருக்கும் பாதிக்கப்பட்ட நபர்களின் குரல்களை உள்ளடக்கிக்கொள்ள வேண்டிய தேவையை ஆணையாளர் வலியுறுத்துவதுடன், இது தொடர்பாக புலம்பெயர் சமூகத்தையும் அணுக வேண்டும் என ஊக்குவிக்கின்றார்.

26. அரசாங்கத்தினால் ஒரு முன்னுரிமையாகக் கருதப்பட்டிருக்கும் காணாமற்போன ஆட்கள் பற்றிய உத்தேச அலுவலகம் தொடர்பாக 2016 மே மாதத்தில் சமாந்தரமான ஒரு துரித கலந்தாலோசனைச் செயன்முறை நடத்தப்பட்டது. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான சமாந்தரமான ஒரு கலந்தாலோசனைச் செயன்முறை இதற்கு முன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது என்ற விடயம் - வேறுபட்ட விதத்திலும், பெருமளவிலான



வளங்களின் முதலீட்டுடனும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்ற விடயம் - இலங்கை அத்தகைய சிக்கலான செயன்முறைகளில் செயற்றிறன் மிக்க விதத்திலும், சமாதானமான முறையிலும் ஈடுபட முடியும் என்பது குறித்த நம்பிக்கையை வழங்குகின்றது.

27. அதே வேளையில், பல்வேறு துறைகளில் செயற்பட்டு வரும் ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளை அரசாங்கம் பெற்றுக் கொண்டிருப்பதுடன், நிலைமாற்றக் கால நீதிப் பொறிமுறை தொடர்பான பல்வேறுபட்ட மாதிரிகளை வடிவமைக்கும் செயற்பாட்டில் அவர்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு, வெளிப்படைத்தன்மை என்பன மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. அத்தகைய பூர்வாங்க வேலைகள் அவசியமாக இருந்து வரும் அதே வேளையில், அது கலந்தாலோசனைச் செயன்முறையின் பெறுபேறுகளை முன்னரேயே நிர்ணயிக்க முடியாது. மேலும், அதனைப் பயனற்றதாகவும் ஆக்க முடியாது. தனிப்பட்ட முறையில் திரைக்குப் பின்னால் இடம்பெற்று வரும் இது தொடர்பான நிபுணர்களின் பணிகளுடன் பொது மககள் பங்கேற்புப் பரிமாணங்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது.

28. காணாமல்போன ஆட்கள் பற்றிய பிரத்தியேக அலுவலகம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கான சட்டவாக்கத்தின் தயாரிப்புப் பணிகளில் ஏற்கனவே ஒரு பதற்ற நிலை தென்படத் தொடங்கியுள்ளது. காணாமல்போன நபர்கள் தொடர்பான பிரச்சினையைக் கவனத்திலெடுப்பது ஒரு அவசரத் தேவையாக இருந்து வருவதுடன், அது பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகம் ஆகியோருக்கு மத்தியில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கட்டியெழுப்ப முடியும். எனவே, அரசாங்கம் இந்தப் பணியை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்வது சரியானதாகும். உத்தேச அலுவலகம் ஒரு நிரந்தரக் கட்டமைப்பாக இருந்து வரவிருப்பதுடன், அது பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கவுள்ளது. அதாவது சட்ட, நிர்வாக உள - சமூக சேவைகளை வழங்கவிருப்பதுடன், காணாமல் போயிருக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கு நேர்ந்த கதியை கண்டறிவதற்கென செயற்படும்.

29. அரசாங்க ஆலோசகர்களின் ஒரு செயற்குழு காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டவாக்கத்தின் வரைபினைத் தயாரித்துள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த வரைபு பகிரங்கமாக பகிர்ந்து கொள்ளப்படவோ அது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்படவோ இல்லை. இந்த வரைபு தொடர்பாக பொதுமக்களின் விவாதம் வரையறுக்கப்பட்ட அளவில் இடம்பெற்று வருவது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோர் கரிசனைகளை எழுப்பிய பொழுது, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கலந்தாலோசனைச் செயலணியைச் சேர்ந்தவர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்துவதையும் உள்ளடக்கிய விதத்தில் பங்கீடுபாட்டாளர்களின் மகஜர்களை உள்வாங்குவதற்கான தாமதமான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த வரைபுச் சட்டம் மே மாத இறுதிப் பகுதியில் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டிருப்பதுடன், மே 27 ஆம் திகதி வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டு, யூன் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



30. பரந்த தளத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கம் 2015 டிசம்பர் மாதத்தில் காணாமல்போன நபர்கள் தொடர்பான சமவாயத்தில் கைச்சாத்திட்டதுடன், அதனை அது 2016 மே மாதத்தில் அத்தாட்சிப்படுத்தியது. அதனை இயலச்செய்யும் சட்டவாக்கம் இப்பொழுது வரையப்பட்டு வருவதுடன், அது காணாமல்போன நபர்கள் தொடர்பான சமவாயத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளுடன் இணைந்த விதத்தில், ஆட்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் தண்டனைச்சட்டக் கோவையில் ஒரு

குற்றச் செயலாக உள்ளடக்கப்படும் என ஆணையாளர் நம்புகின்றார். அமைச்சரவை யூன் 7 ஆம் திகதி இல்லாமை சான்றிதழ்களை வழங்குவதற்கு இயலச் செய்யும் சட்டவரைபுக்கு ஒப்புதல் அளித்தது. இந்த சட்டவரைபு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன், வெகு விரைவில் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. காணாமல்போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் (பரணகம ஆணைக்குழு) இரண்டாவது அறிக்கை அக்டோபர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அந்த ஆணைக்குழு தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வந்தது. ஆனால், குற்றமிழைத்தவர்களாக அரசாங்கத்தரப்பைச் சேர்ந்த நபர்கள் இருந்து வருவதாக ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்டிருக்கும் ஒரு சில சம்பவங்களையும் உள்ளடக்கிய விதத்தில் மேலும் குற்றவில் புலன்விசாரணைகள் தொடர்பான தகவல்கள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை.

31. காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்துக்கான வரைபு மசோதாவைத் தயாரித்த நிபுணர்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் விசேட நீதிமன்றம் போன்ற நிலைமாற்றக்கால நீதி தொடர்பான பல்வேறுபட்ட எண்ணக்கரு குறித்த மாதிரிகள் தொடர்பாகவும் செயற்பட்டு வர முடியும். எவ்வாறிருப்பினும் இத்தகைய ஆவணங்கள் பகிர்ந்து கொள்ளப்படவில்லை. அத்தகைய அடிமட்டப் பணிகள் அவசியமாக இருந்து வருவதுடன், அவை வரவேற்கத்தக்கவையாக இருந்துவரும் அதே வேளையில், வெளிப்படைத்தன்மையில்லாத நிலை சமாந்தரமான விதத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கலந்தாலோசனைச் செயன்முறைகளையும், பாதிக்கப்பட்ட மக்களின் பங்கேற்பினையும் உதாசீனம் செய்வதாக இருந்து வருகின்றது. தேசிய கலந்தாலோசனைகள் மிகத் தீவிரமான மற்றும் கண்ணியமான உரையாடல் வடிவம் ஒன்றாக இருந்துவர வேண்டியிருப்பதுடன், அதன் மூலம் கலந்தாலோசனைக்குட்படுத்தப்பட்ட தரப்புக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைப்பதற்கான ஒரு வெளி வழங்கப்பட வேண்டும். மனித உரிமைகள் பேரவைக்கான எனது கடைசி அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டவாறும், தீர்மானம் 30/1 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறும், நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளை வடிவமைப்பதில் அல்லது மேம்படுத்துவதில் சர்வதேச செயற்பாட்டாளர்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

32. இங்கு இருந்துவரும் முக்கியமான கேள்வி சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுனர்கள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோர் நீதிப் பொறிமுறையில் பங்கேற்பது தொடர்பான விடயமாகும். பிரதம மந்திரி 2016 ஆம் ஆண்டு மே மாதக்கடைசிப் பகுதியில் பெருந்தொகையான மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு



மத்தியில் உரையாற்றும் பொழுது, இலங்கையின் உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் சர்வதேசப் பங்கேற்பு இடம்பெறமாட்டாது என்பதனை மீண்டும் ஒருமுறை குறிப்பிட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. பொறுப்புக்கூறும் பொறிமுறைகளில் சர்வதேசப் பங்கேற்பு பாதிக்கப்பட்டவர்களின் கண்ணோட்டத்தில் செயன்முறையின் சுயாதீனத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை என்பவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கான ஒரு தேவையாக இருந்து வருகின்றது என ஆணையாளர் நம்புகின்றார். ஏனெனில், இலங்கையின்

நீதித்துறை நிறுவனங்கள் தற்பொழுது அம்மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நம்பகத்தன்மையை கொண்டிருக்கவில்லை. மேலும், இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் சர்வதேசக் குற்றச் செயல்களின் பரிமாணம் மற்றும் சிக்கலான தன்மை என்பவற்றையும் கருத்தில் கொள்வது முக்கியமாகும். மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட புலன்விசாரணையின் போது கண்டறிப்பட்டிருந்த அத்தகைய குற்றச் செயல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் என்பவற்றுக்கு இணையானவையாக இருந்து வர முடியும்.

33. மோதலின் இறுதிக் காலப்பிரிவின் போது கொத்தணிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டது தொடர்பாக அண்மையில் வெளிவந்திருக்கும் புதிய சான்றுகள் தொடர்பான அறிக்கைகளின் பின்னணியில், மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன்விசாரணை அறிக்கையில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் நிலையில், இது தொடர்பாக சுயாதீனமான, பக்கச்சார்பற்ற புலன்விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஆணையாளர் கேட்டுக் கொள்கிறார்.

34. அரசாங்கம் எதிர்நோக்கி வரும் மற்றொரு சவால் பாதுகாப்புத் துறை சீர்திருத்தச் செயன்முறையை ஆரம்பித்து வைப்பது எப்படி என்பதாகும். இச்சீர்திருத்தச் செயன்முறைக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பான பாரதூரமான குற்றச்செயல்களில் அல்லது துஷ்பிரயோகங்களில் அல்லது சர்வதேச மனித உரிமை மீறல்களில் நம்பகமான விதத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாக நியாயமான ஒரு நிர்வாகச் செயன்முறைக்கூடாக கண்டறியப்பட்டிருக்கும் ‘‘எந்தவொரு நபரையும் பாதுகாப்புப் படைக்குள் வைத்துக்கொள்வதற்கோ அல்லது பாதுகாப்புப் படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ எந்தவொரு வாய்ப்பும் இருந்து வரவில்லை’’ என்பதனை உறுதிப்படுத்தும் அனைத்துமடங்கிய வடிகட்டும் செயன்முறையொன்றையும் உள்ளடக்குகின்றது[7]. இலங்கையின் பாதுகாப்புப் படைகள் சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பில் - குறிப்பாக ஐக்கியநாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் படைகளில் - பங்கேற்பதில் தனக்குரித்தான இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இது மிக முக்கியமாகும். மாலியில் MINISMA படையணியில் இலங்கையின் தாக்குதல் படையணியின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கென ஏற்கனவே ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவர்களை இந்த படையணிகளில் அமர்த்துவதற்கு முன்னர்



அரசாங்கம் சுயாதீனமான சிவிலியன் மனித உரிமைகள் கூறொன்றுடன் கூடிய பொருத்தமான வடிகட்டல் நடைமுறை ஒன்றை அமுல் செய்வது அத்தியாவசியமாக இருந்து வரும். இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பு கண்டிப்பான வடிகட்டும் நடைமுறைகளை அமுல் செய்வதற்கென அரசாங்கத்துடன் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் இணைந்து செயற்படும். இலங்கை படையணிகளில் அமர்த்தப்படவிருக்கும் ஆளணியினர் தொடர்பாகவும் இந்த வடிகட்டல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## முடிவுகள்

35. ஒட்டுமொத்தமாக, தீர்மானம் 30/1 இல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சில முக்கியமான கடப்பாடுகளை அமுல் செய்யும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரையில் முன்னெடுத்திருக்கும் படிமுறைகள் குறித்தும், நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளை மேலும் விரிவாக வடிவமைப்பதற்கென தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் கலந்தாலோசனைகள் மற்றும் ஆயத்தங்கள் என்பன குறித்தும் மனித உரிமைகள் பேரவை ஓர் உற்சாக உணர்வை பெற்றுக்கொண்டுள்ளது. அரசியலமைப்புச் சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டமை, சுயாதீனமான மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை மற்றும் காணாமல் போன நபர்கள் தொடர்பான சமவாயம் அத்தாட்சிப்படுத்தப்பட்டமை என்பன முக்கியமான சாதனைகளாக இருந்து வருவதுடன், அவை எதிர்காலத்துக்கென ஒரு பாரம்பரியத்தை விட்டுச்செல்ல முடியும். காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் காணாமல்போன குடும்பங்களின் நபர்களுக்கு ஆகக் குறைந்தது உடனடி நிவாரணம் ஒன்றை வழங்க முடியும் என நம்பலாம். எவ்வாறிருப்பினும், முழுமையான நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளின் ஸ்தாபிதம், கடந்த காலத்தில் இடம்பெற்றிருக்கும் மனித உரிமை மீறல்களுக்கு அனைத்துமடங்கிய ஒரு நிவாரணத்தை வழங்க வேண்டியிருப்பதுடன், அத்தகைய உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதனையும் அது உத்தரவாதப்படுத்துதல் வேண்டும்.

36. காணிகளை விடுவித்தல், தடுப்புக்காவல் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துதல், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டங்களை எடுத்து வருதல் போன்ற ஏனைய விடயங்களில் மேலும் துரிதமான, நிலையான முன்னேற்றத்தை எட்டியிருக்க முடியும். அவை சிறுபான்மைச் சமூகத்துக்கு மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய வழிமுறைகளாகும். குறியீட்டு அடிப்படையிலான சம்பவங்கள் தொடர்பாக புலன்விசாரணைகளை ஆரம்பிப்பதன் மூலம் தொடக்கத்தில் எடுத்துக்காட்டப்பட்ட வேகம் தக்க வைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். உரிய

---

7. A/HRC/RES/30/1, OP. 8



காலத்தில் மேற்கொள்ளப்படும் வெற்றிகரமான வழக்குத்தொடுப்புக்கள் கடந்த காலத்தின் தண்டனைக்குப் பயமின்றி குற்றங்கள் இழைக்கப்பட்ட நிலையில் முக்கியமான ஒரு மாற்றப் புள்ளியை எடுத்துவர முடியும். தன்னிச்சையான கைது, சித்திரவதை, பாலியல் வன்முறை என்பன தொடர்பான தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களும், அதேபோல பொதுவான இராணுவக் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களும் உடனடியாக கவனத்திலெடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நடைமுறைகளை ஊக்குவித்த கட்டமைப்புக்களும், நிறுவனரீதியான கலாசாரமும்

களையப்படுவதுடன் கடந்தகால நடைமுறைகள் தொடர்பாக சகிப்புத்தன்மை காட்டப்படமாட்டாது என்ற விடயம் எடுத்துக் காட்டப்படுதல் வேண்டும்.

37. தீர்மானம் 30/1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகளை அமுல் செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒருங்கிணைந்த பொருத்தமான கால ஒழுங்குடன் கூடிய விதத்தில் பல்வேறு செயன்முறைகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அதனை இயலச் செய்யும் அனைத்துமடங்கிய ஓர் உத்தி அவசியமாக இருந்து வருகின்றதென ஆணையாளர் நம்புகின்றார். அத்தகைய ஓர் உத்தி அரசாங்கத்துக்குள் தற்பொழுது நிலவி வரும் பொருத்தமற்ற விதத்திலான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளை ஒன்றாக இணைப்பதுடன், சர்வதேச கொடை வழங்குனர் சமூகத்தின் ஆதரவு தொடர்பாக உயரளவிலான ஒருங்கிணைப்புக்கும் வசதி செய்து கொடுக்கும். அது பொதுமக்களுக்குத் தகவல் வழங்கும் பிரச்சார இயக்கமொன்றின் பக்க பலத்துடன் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அந்தப் பிரச்சார இயக்கம் நிலைமாற்றக்கால நீதிச் செயன்முறையின் பின்னால் சிவில் சமூகத்தின் வலிமை மற்றும் பங்கேற்பு என்பவற்றை அணிதிரட்டுதல் வேண்டும். மேலும், இது வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதுடன், பாதிக்கப்பட்ட நபர்கள், சிவில் சமூகத்தினர் ஆகியோருடன் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் கலந்தாலோசனைச் செயன்முறையை உச்ச மட்டத்தில் முன்னெடுப்பதற்கும், நிலைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளின் வடிவமைப்புக்கு பயனுள்ள உள்ளீடுகளை இது தொடர்பாக உறுதிப்படுத்த முடியும். மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் மேலும் ஆலோசனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவிகள் என்பவற்றை வழங்குவதற்கு தொடர்ந்தும் தயார் நிலையில் இருந்து வருகின்றது.

38. இலங்கை ஆரம்பித்து வைத்திருக்கும் நிலைமாற்றச் செயன்முறைக்கு தவிர்க்க முடியாத விதத்தில் நீண்ட காலம் எடுக்க முடியும். அரசியலமைப்புச் சீர்திருத்தம், நிலைமாற்றக்கால நீதி, பொருளாதார மீட்சி மற்றும் பாதுகாப்புத்துறை சீர்திருத்தம் போன்ற பன்முக வழிகளிலான சீர்திருத்தங்களைக் கையாள்வது எந்தவொரு அரசாங்கத்தின் ஆற்றல் மீதும் மிகுந்த அழுத்தத்தை எடுத்து வரமுடியும். எவ்வாறிருப்பினும், பல்வேறு தரப்புக்களிலிருந்தும் இந்தச் செயன்முறை தொடர்பாகக் காட்டப்பட்டு வரும் பொறுமையின்மை, பதற்றம் மற்றும் சந்தேகங்கள் என்பவற்றை கவனத்திலெடுப்பதற்கென அரசாங்கம் திட்டவட்டமான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆணையாளர் கேட்டுக்கொள்வதுடன், இச்செயன்முறையின் பின்னால் அனைத்து இலங்கையர்களும் ஒன்று திரள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றார். இந்தச் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கும், அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களுக்கும் - குறிப்பாக பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு - உத்தரவதாம் மற்றும் நம்பிக்கை என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் மனித உரிமைகள் பேரவையின் ஊக்குவிப்பு மற்றும் ஆதரவு என்பன நிர்ணயகரமானவையாக இருந்து வந்துள்ளன. எனவே, மனித உரிமைகள் பேரவை அதன் நெருக்கமான உறவினை தக்கவைத்துக் கொள்ளும் என ஆணையாளர் நம்புவதுடன், அதன் 34 ஆவது அமர்வில் மேலும் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றார்.

---